# பத்திரிக்கைச் செய்தி

புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்தை புகார்தாரர் அணுகி தன்னுடைய நிலத்திற்கு இலவச விவசாய மின் இணைப்பு வழங்க தடையில்லா சான்றுக்கு பரிந்துரை செய்வதற்கு புதுக்கோட்டை மாவட்டம் கல்லணை கால்வாய் பிரிவு, நாகுடி பொதுப்பணித்துறை இளநிலை பொறியாளர் திரு.தென்னரசு, அவர்கள் தனக்கு ரூ5000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என வற்புறுத்துவதாகவும் அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 28.10.2020 நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிககையின்போது புதுக்கோட்டை மாவட்டம் கல்லணை கால்வாய் பிரிவு, நாகுடி பொதுப்பணித்துறை இளநிலை பொறியாளர் திரு.தென்னரசு, புகார்தாரரிடமிருந்து ரூ.5,000/- கையூட்டாக வாங்கும்போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.